செய்தி வெளியீடு எண் : 07 நாள் :03.05.2018

***தேனி மாவட்டம்,***
***சிற்றுந்து உரிமையாளர்கள் மற்றும் ஆட்டோ ஓட்டுநர்களுடனான ஆலோசனைக்கூட்டம்***
***மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது:-***

*****

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் சிற்றுந்து உரிமையாளர்கள், ஆட்டோ ஓட்டுநர்களுடனான ஆலோசனைக்கூட்டம் இன்று (03.05.2018) மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவிக்கையில், சிற்றுந்து மற்றும் ஆட்டோ ஓட்டுநர்கள் தங்களது வாகனங்களில் பயணிக்கும் பயணகளின் வாழ்வை எண்ணி அவர்களின் நம்பிக்கைக்கு உத்தரவாதம் அளித்திடும் வகையில் பொறுப்புடன் வாகனங்களை இயக்கிட வேண்டும். தங்களுக்கு அனுமதிக்கப்பட்ட இடங்களில் மட்டுமே பயணிகளை ஏற்றி, இறக்கிட வேண்டும். போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படுத்தாது வகையிலும், பொதுமக்களை அச்சுறுத்தாத வகையிலும் வாகனத்தை இயக்கிட வேண்டும். அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கையை விட கூடுதலான பயணிகளை ஏற்றக்கூடாது.

வாகனம் ஓட்டும்போது ஓட்டுநர்கள் விருப்பு வெறுப்பிற்கு இடமளிக்காமல் முழு கவனத்துடன் வாகனத்தை இயக்குவதோடு, அனுமதிக்கப்பட்ட அளவினைவிட அதிகமான வேகத்தில் இயக்கக் கூடாது. வாகனம் இயக்கும்போது மது அருந்துவது, கைபேசியை உபயோகிக்க கூடாது. எதிரில் வாகனம் எதுவும் வரவில்லை என உறுதி செய்த பின்னரே, பிற வாகனத்தினை கடந்து செல்ல முயற்ச்சிக்க வேண்டும். களைப்பு, உறக்கம், சோர்வு ஏற்படும் நேரங்களில் வாகனத்தை இயக்கக் கூடாது. நமக்கு முன்பாக செல்லும் வாகனத்திற்கும், நமது வாகனத்திற்கும் தேவையான அளவு இடைவெளி விட்டு பயணத்தை தொடர வேண்டும். வாகனம் ஓட்டும் போது அருகில் உள்ளவரிடம் பேசுவதை முற்றிலுமாக தவிர்த்திட வேண்டும்.

பேருந்து நிலையத்திற்குள் அனுமதியில்லாமல் பேருந்து பயணத்திற்கு தடை ஏற்படும் வகையில் செல்லாக் கூடாது. பொது இடங்களில் தங்களுக்கு அனுமதிக்கப்பட்ட நேரத்தினைவிட கூடுதலான நேரத்தில் நிறுத்தி வைக்ககூடாது போக்குவரத்து விதிமுறைகளை முறையாக பின்பற்றி விபத்தினை தவிர்த்திட வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.வீ.பாஸ்கரன் அவர்கள், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ச.கந்தசாமி அவர்கள், வட்டார போக்குவரத்து ஆய்வாளர் திரு.செல்வக்குமார் அவர்கள், காவல் துணை கண்காணிப்பாளர்கள் திரு.சீமைச்சாமி அவர்கள், திரு.சேது அவர்கள், திரு.பிரபாகரன் அவர்கள், திரு.கணபதி அவர்கள், சிற்றுந்து உரிமையாளர்கள், ஆட்டோ ஓட்டுநர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தேனி.**